செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 228/17 நாள்: 20/4/17

# புதிய ஸ்மார்ட் ரேஷன் அட்டை

நாள்: 20/04/2017.

- நாளது தேதியில் 1824 நியாயவிலைக் கடைகள் வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இதில் 928 முழு நேரக் கடைகளும் 896 பகுதிநேரக் கடைகளும் உள்ளன. இதில் 13 கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் முழுநேரக் கடைகளும் உள்ளன.
- தற்போது நடைமுறையில் இருந்துவரும் குடும்ப அட்டை 2005-ம் வழங்கப்பட்டது.
- புதிய ஸ்மார்ட் ரேஷன் அட்டை வழங்குவதன் முதல் படியாக Point of Sale இயந்திரம் வேலூர் மாவட்டத்தில் 07/09/2016 முதல் நியாயவிலைக் கடைகளுக்கு வழங்கப்பட்டது.
- குடும்ப அட்டையுடன் ஆதார் எண் இணைக்கும் பணி மற்றும் கைப்பேசி எண் இணைக்கும் பணி ஆகியன நியாயவிலைக் கடைகளிலும், பல சிறப்பு முகாம்கள் நடத்தியும் பதிவு செய்யப்பட்டது.
- ஸ்மார்ட் குடும்ப அட்டையில் பெயர்கள் சேர்த்தல், நீக்கல், குடும்ப தலைவரின் புகைப்படத்தினை மாற்றுதல் ஆகியவைகளை அட்டைதாரரே Online-ல் tnpds.com என்ற இணையதளத்தில் செய்துகொள்ள ஏதுவாக நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது.
- புதிய ஸ்மார்ட் குடும்ப அட்டை அந்தந்த நியாயவிலைக் கடைகளிலேயே 01/04/2017-ம் தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- வேலூர் மாவட்டத்திற்கு நாளது தேதி வரை 2,13,918 ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் அச்சடித்து வரப்பெற்று, 38,217 குடும்ப அட்டைகள் நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.
- புதிய ஸ்மார்ட் குடும்ப அட்டை அச்சடிக்கப்பட்டு விநியோகிக்க தயார் நிலையில் உள்ளபோது, குடும்ப அட்டைதாரரின் கைப்பேசிக்கு இவ்விவரம் குறுஞ்செய்தியாக முன்கூட்டிய தகவல் அனுப்பப்படும். இந்த குறுஞ்செய்தியுடன் ஒரு இரகசிய அடையாள எண்ணும் அனுப்பி வைக்கப்படும். அந்த அடையாள எண்ணினை விற்பனையாளரிடம் காண்பித்தவுடன், புதிய ஸ்மார்ட் குடும்ப அட்டையை வழங்குவதோடு, புதிய ஸ்மார்ட் குடும்ப அட்டையை Activate-ம் செய்திடுவார்.
- இந்த இரகசிய அடையாள எண் 15 நாட்கள் செயலில் இருக்கும்.
- ஸ்மார்ட் குடும்ப அட்டை Activate செய்தபின்னர் ஸ்மார்ட் குடும்ப அட்டையைக் கொண்டே உணவுப் பொருட்கள் பெறப்படவேண்டும்.
- ஸ்மார்ட் குடும்ப அட்டை பெறாதவர்கள், பழைய குடும்ப அட்டையைக் கொண்டே உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

20/4/17
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.